32. விளிம்பின் நீளம் , அகலம், உயரம் 4 cm கொண்ட பெரிய சதுரமுகியொன்றில் விளிம்பின் நீளம், அகலம் , உயரம் 1cm ஆன சிறிய சதுரமுகிகள் எத்தனை வெட்டியெடுக்கலாம்?

1) 16 2) 36 3) 64

33. நான்கினாலும் ஐந்தினாலும் வகுத்ததன் பின் மீதியாக 2 க் கொண்ட எண் எதுவாகும்.

1) 61 2) 60 3) 62

34. அக்கா 15 நிமிடங்களில் 10 காகித பூக்கள் செய்வார். நான் 10 நிமிடங்களில் 6 காகிதப்பூக்கள் செய்வேன். தங்கை 30 நிமிடத்தில் 15 காகித பூக்கள் செய்வாள். நாங்கள் மூவரும் காலை 9.00 மணியில் இருந்து காலை 10.00 மணிவரை எத்தனை காகிதப்பூக்களைச் செய்வோம்?

1. 96 காகிதபூக்கள் 2. 106 காகிதப்பூக்கள் 3. 153 காகிதப்பூக்கள்

35. சாணுஜா காலைவேளை பாடசாலை செல்லும் போது அவளது நிழல் வலது கைப்பக்கம் விழுமாயின் சாணுஜா கல்வி கற்கும் பாடசாலை இருக்கும் திசை யாது?

1.வடக்குத்திசை 2. தெற்குத்திசை 3. மேற்குத்திசை

36. 8லீற்றல் கொள்ளக்கூடிய பாத்திரமொன்றில் $^{1}/_{2}$ பங்கிற்கு நீர் உள்ளது. 4லீற்றர் கொள்ளக்கூடிய பாத்திரமொன்றில் $^{3}/_{4}$ பங்கு நீர் உள்ளது. இரண்டு பாத்திரங்களிலும் உள்ள நீரின் அளவு யாது?


1. 5 லீற்றர் 2. 6லீற்றர் 3. 7 லீற்றர்


திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

37. கீழுள்ள கூற்றுக்களில் நடைபெறக்கூடியது எது?

1. குயிலின் கூட்டில் காகம் முட்டையிடுதல்
2. சிங்கம் திராட்சைப் பழங்களை உண்டு பசியைப் போக்கும்.
3. குயில் காகத்தின் கூட்டில் முட்டையிடுதல்



* 38ம், 39ம் வினாக்களுக்கு கீழேயுள்ள உருக்களை அவதானித்து விடைதருக.



38.  இதன் நிறை யாது?

1. 10kg 2. 11kg 3. 12kg

39. பெறுமதி குறைந்தது முதல் கூடியது வரை ஒழுங்கு படுத்தினால் வருவது.

1. 
2. 
3. 

40. மணிக்கு 40km மாறா வேகத்தில் செல்லும் பேருந்து 2 மணித்தியாலம் 45 நிமிடத்தில் அது பயணித்த தூரம் யாது?

1. 90km 2. 110km 3. 120km

புலமைக்கதிர்

முயற்சி - பயிற்சி - வெற்றி

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

புலமைக்கதிர்

மாதிரி வினாத்தாள்- 2020

5

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-2020

4

பத்திரம் II

பெயர் :.....

1மணி 15நிமிடம்

01. பந்தியை மட்டும் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

வண்ணத்துப்பூச்சிகளின் பிரதான உணவு அமுதம் ஆகும். பெரும்பாலும் அவை திரவ உணவையே உண்ணும். அவை கண்களைத் திறந்தபடியே இரவில் ஓய்வெடுக்கின்றன. இவற்றின் இறக்கைகளில் அமைந்துள்ள நரம்புமண்டலம் இறக்கைகளுக்குச்சக்தியைக் கொடுக்கின்றது. உலகின் பல பகுதிகளிலும் பல வண்ண வண்ணத்துப்பூச்சிகள் காணப்படுகின்றன.

i. வண்ணத்துப்பூச்சிகளின் பிரதான உணவு என்ன?

.....

ii. வண்ணத்துப்பூச்சிகள் இரவில் எவ்வாறு ஓய்வெடுக்கின்றன?

.....

iii.ஆகாரம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லினை எழுதுக.

.....

iv.ஓய்வெடுக்கின்றன என்பதனைப் பிரித்து எழுதுக.

.....

v.பகல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லினை எழுதுக..

.....

vi. வண்ணத்துப்பூச்சிகளின் இறக்கைகளுக்குச் சக்தியைக் கொடுப்பது எது?

.....

02. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. குஞ்சுகள் ..... (இரையை, இறையை) உண்டன.
2. அதிபரின் பேச்சு எமக்கு .....த் (உட்சாகத்தை, உற்சாகத்தை) தந்தது.
3. தினமும் ..... (உடற்பயிற்சி, உடற்பயிற்ச்சி) செய்தல் உடலுக்கு உகந்தது.

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.ikeet.lk

03. தடித்த எழுத்தில் உள்ள சொற்றொடர்களின் கருத்தினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. மகனின் சாதனையைக் கேள்வியுற்ற தாய் **உச்சிகுளிர்ந்தாள்**
   (பாராட்டினாள் / மிக மகிழ்ந்தாள்)
2. பிறரது **சுகதுக்கங்களில்** நாம் பங்கு கொள்வது மனிதத்தன்மையாகும்.
   (துன்ப துயரம் / இன்ப துன்பம்)

04. தொடக்கத்தில் தரப்பட்ட சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்க. அதன்கீழ்க் கோடிடுக.

தானம் – (பனுவல், ஈகை, மகவு)

கண் – (நயனம், மல்லிகை, அம்புலி)

05. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

1. சந்துரு கடையில் தலாணி வேண்டினான்.

.....

2. நான் கையை சவுக்காரம் போட்டு கழுவினேன்.

.....

06. தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள மெய் எழுத்துக்களின் வரிசையில் விடுபட்ட எழுத்துக்களை எழுதுக.

க், ங், ச், ஞ், ..., ண், த், ந், ..., ம்

07. கீழே தரப்பட்ட சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. மற்றவர்களைப் பற்றி அக்கறையில்லாதவன் .....
2. முனிவர்கள் வாழுமிடம் .....


08. சரியான விடையை எழுதுக.

1. இருளை ஒளியால் நிரப்பிய அற்புத மனிதர் யார்? .....
2. வெருளியின் விரல் போன்று இருப்பவை எவை? .....

09. பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.



.....



.....

10. 1. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

I am Sahan .....

2. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கில எழுத்தில் எழுதுக.

நான் வவுனியாவில் வசிக்கிறேன்.

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

11. பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தெரிவு செய்க.

1. ..... (I/ We) are Srilankan
2. The Cat is ..... (on / under) the table.

12. தரப்பட்டுள்ள சிங்கள வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. வேலாவ தொளஹய் .....
2. எத்தனட்ட துவன்ன .....

13. பின்வருவனவற்றின் சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.

1. சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள் .....
2. நண்பி .....

தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.

14. இலக்கங்களில் எழுதுக.

பத்தொன்பதாயிரத்து எண்பத்து ஒன்பது.....

15. கட்டத்துள் தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி மிகச்சிறிய நான்கிலக்க எண்ணை எழுத்துக்களில் எழுதுக.

6	3
0	9


.....

16. தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்குரிய முந்திய, பிந்திய உரோம எண்களை எழுதுக.

....., xviii .....

17. தரப்பட்டுள்ள எண் கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையும் எழுதுக.

1. 4, 8, 16, ..., ...
2. 63, 56, 49, ..., ...


18. இவ்வுருவில் 

1. நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக. .....
2. நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதுக. .....

19. பி.ப 2.45 மணியினை நியம முறையில் காட்டும் விதத்தினை எழுதுக?

.....

20. A, B ஆகிய இரு பென்சில்களுக்கு இடையிலான நீள அளவுகளின் வித்தியாசத்தை மில்லி மீற்றரில் எழுதுக.




.....

21. 6kg 500g நிறையுள்ள தேயிலையை 500g நிறை கொண்ட எத்தனை பொதிகள் ஆக்கலாம்?

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

22. 

B பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு A பாத்திரத்தால் இன்னும் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்.

.....

23. 718 பென்சில்களை ஒரு பலகைக்கு 6 வீதம் பெட்டிகளில் பொதிசெய்ய வேண்டியுள்ளது.


i. பொதிசெய்யத் தேவையான பெட்டிகள் எத்தனை?.....

ii. பொதிசெய்த பின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்கள் எத்தனை? .....

24. பி.ப. 1.45 மணிக்கு கோயிலுக்குப் புறப்பட்ட கமலா ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்களின் பின்னர் கோயிலைச் சென்றடைந்தாள். அவள் கோயிலை அடைந்த நேரம் யாது?

.....

25. அருகில் உள்ள உருவின்



1. உச்சிகளின் எண்ணிக்கை யாது? .....
2. A முகத்தின் வடிவம் யாது? .....

26. தை மாதம் 5ஆம் திகதி புதன்கிழமை எனின் அம்மாதத்தில் வரும் புதன்கிழமைகளின் எண்ணிக்கை யாது?

.....

27. ரவி குமார் ஆகியோரின் நிறை 70kg ஆகும். ரவியை விட குமார் 8kg நிறை கூடியவர் எனின் ரவியின் நிறை யாது?


.....

28. அருகே உள்ள உருவின் சமச்சீர் கோடுகளை வரைக.



29. அம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பு வரையான தூரம் யாது?

.....



சரியான விடையைத் தெரிவு செய்க.

30. வித்தை கொண்டிராத பழம் எது?

1. தோடை 2. மா 3. வாழை

31. ஆணி வேர் அற்ற தாவரம் எது?

1. மா 2. பலா 3. கமுகு

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

32 பசுப்பாலிலிருந்து தயாரிக்கும் உணவு அல்லாதது?

1. வெண்ணெய் 2. மாஜரீன் 3. யோக்கட்

33. பிரதான துறைமுகம் அமைந்துள்ள நகரம்

1. கொழும்பு 2. திருகோணமலை 3.சிலாபம்


34. இலங்கையை சூழவுள்ள சமுத்திரம் எது?

1. ஆட்டிக்சமுத்திரம்
2. பசுபிக் சமுத்திரம்
3. இந்து சமுத்திரம்


35. இலங்கையில் ரம்புட்டான் பழத்திற்கு பிரசித்திபெற்ற இடம் எது?

1. மல்வானை 2. சீதுவை 3. வட்டவளை

36. மின் விநியோகிக்கும் இடம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் உருவக் குறியீடு

1. 
2. 
3. 

37. உரு குறித்து நிற்கும் தையல் வகை



1. சோம் தையல்
2. சங்கிலித்தையல்
3. கம்பளித்தையல்

38. முட்டையிட்டு இனம் பெருக்காத பிராணி

1. ஓணான் 2. அரணை 3. தேள்

39. போதி மரத்திற்கு நீர் ஊற்றி வழிபாடு செய்பவர்கள்

1. இஸ்லாமியர் 2. பௌத்தர்கள் 3. கிறிஸ்தவர்கள்

40. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் முளைக்கக்கூடிய வித்துக்களைத் தெரிவு செய்யலாம்.

1. உலர்ந்த காயிலிருந்து எடுத்த வித்து
2. நீரில் இட்டதும் அடியில் அமிழும் வித்து
3. நிரில் போட்டதும் மிதக்கும் வித்து

41. கட்டணம் செலுத்திப் பெறப்படும் சேவை அல்லாதது.

1. மின்சாரம் 2. போக்குவரத்து 3. கல்வி

42. 

அருகிலுள்ள குறியீட்டின் மூலம் நாம் பெறும் சேவை

1. போக்குவரத்து
2. மின்சாரம்
3. தபாற்சேவை

43. நீரை வடியவிடும் தன்மை கொண்ட மண்வகை?

1. களி மண் 2. மணல் மண் 3. வண்டல்மண்

44. இருட்டான பகுதியில் அதிகமாக வாழும் பிராணி

1. பல்லி 2. நுளம்பு 3. கரப்பன்

45. கிராமிய மக்களால் ஆடப்படும் நடனம் அல்லாதது

1. கோலாட்டம் 2. பரதம் 3. கும்மி

46. இரவில் இலைசுருங்குந் தன்மை கொண்ட தாவரக்கூட்டம்

1. மா, கொய்யா 2. வாகை, கொய்யா 3. அகத்தி, வாகை

47. காற்றில் வைக்கப்படும் போது விரைவாகக் கரையும் பதார்த்தம்

1. கற்பூரம் 2. மெழுகு 3. உப்பு

48. நீரில் கரைக்கும் போது வெப்பத்தை வெளிவிடும் பதார்த்தம்

1. யூரியா 2. குளுக்கோஸ் 3. சுண்ணாம்பு

49. திருகோணமலையிலிருந்து கண்டிக்குச் செல்வதற்குப் பயன்படுத்த முடியாத போக்குவரத்துச் சாதனம்

1. கப்பல் 2. புகையிரதம் 3. பேருந்து

50. பின்வருவனவற்றில் எது தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படக்கூடிய பாதகமாகும்?

1. நேரடி ஒளிபரப்புக்களை பார்க்கக் கிடைத்தல்
2. கல்வி நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் கேட்கவும் சந்தர்ப்பம் கிடைத்தல்
3. வாசிப்பதற்கான ஆர்வம் குன்றிப் போதல்.

51. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்து அல்லாதது

1. கத்தாப்பு 2. இலவம்பஞ்சு 3. எண்ணெய்

52. மக்கள் மாட்டிறைச்சியை உண்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டவர் யார்?

1. 
2. 
3. 

53. உடலை நோயிலிருந்து பாதுகாக்க உதவும் போசணைக் கூறு எது?

1. மாப்பொருள் 2. கொழும்பு 3. விற்றமின்கள்

54. எழுத்துக்களை உருப்பெருத்துப் பார்ப்பதற்குப் பயன்படும் கருவி எது?

1. ரெலஸ்கோப் 2. நூணுக்குக்காட்டி 3. கைவில்லை

55. பின்வருவனவற்றுள் முதலுதவிப் பெட்டியில் இருக்க முடியாதது எது?

1. பிளாஸ்டர் 2. அளவுநாடா 3. பனடோல்

56. வதிவிட, குணநலச்சான்றிதழைப் பெற்றுக்கொள்வது?

1. சமாதானநீதவான்
2. மாவட்ட அரசாங்க அதிபர்
3. கிராம உத்தியோகத்தர்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

57. அண்மையில் வெளியிட்ட குற்றி நாணயங்களில் ஐம்பொன் நிறத்திலிருந்து மாற்றப்பட்ட நாணய வகை ?

1. ரூபாய் 10.00, ரூபாய் 5.00
2. ரூபாய் 100.00 ரூபாய் 50.00
3. ரூபாய் 500.00 ரூபாய் 1000.00

58. இலங்கையில் பாதசாரிகள் கடக்கும் மஞ்சள் கோட்டிற்குப் பதிலாக மாற்றப்பட்ட நிறம் எது?

1. கபிலம் 2. இளமஞ்சள் 3. வெள்ளை

59. "விடிவெள்ளி நம் விளக்கு....."எனும் பாடல்

1. மீனவர் பாடல் 2. கமக்காரர் பாடல் 3.கம்மாலைக்காரர் பாடல்

60. நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க நாம் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக மூன்று வாக்கியம் எழுதுக? குறைந்தது ஐந்து சொற்களாவது ஒவ் வொரு வாக்கியத்திலும் இடம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இடம் பெறுதல் வேண்டும்.

1. .....
.....
2. .....
.....
3. .....
.....

www.lkedu.lk

புலமைக்கதிர்

5

மாதிரி வினாத்தாள்- 2020

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-2020

5

பத்திரம் I

சுட்டெண் :.....

45 நிமிடம்

* 1 தொடக்கம் 37 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்ட மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக. 38 – 40 வரை சரியான விடை எழுதுக.


* 1ம், 2ம் வினாக்களில் ஒத்த உருவை தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிவு செய்க.

1.





1. 


2. 

3. 

2.




1. 

2. 

3. 

* 3ம், 4ம் வினாக்களுக்குத் தரப்பட்ட உருக்களைக் கொண்டு விடை தருக.



03. A, B, C ஆகிய இடங்களில் காணக்கூடிய பொருத்தமான உருக்கள் முறையே

1. ஆகாயவிமானம், கொக்கு, கப்பல்
2. ஆகாயவிமானம், கார், கப்பல்
3. கொக்கு, கார், ஆகாயவிமானம்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

04. C என்ற இடத்தில் எப்போதும் காணக்கூடியது?

1. மீன் 2. வள்ளம் (படகு) 3. நீர்

* வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

05. கரும்பு – இனிப்பு : எனின் உப்பு – .....


1. கசப்பு 2. புளிப்பு 3. உவர்ப்பு

06. பசி – உணவு எனின் : நோய் – .....


1. வைத்தியர் 2. மருந்து 3. மயக்கம்

* தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை. அந்த இரண்டு உருக்களும் எவை?


07.



A




B




C

1. Aயும் Bயும் 2. Aயும் Cயும் 3. Bயும் Cயும்


08.



A



B



C

1. Aயும் Bயும் 2. Bயும் Cயும் 3. Aயும் Cயும்

* பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

நல்லறிவான்ற தலைமுறை தோன்றிட
நம்மனைவர்க்கும் அரசு வழங்கும் ஏடிதனை
உடன்பிறவிகளுக்காய் உணர்வுடன் பேணி
அனைவர்க்கும் வழங்குதல் உம் கடன் எனக் கொள்வீர்

09. இப்பாடல் குறிப்பிடும் பிரதான அம்சம் யாது

1. இலவசப் பாடநூலைப் பேணுதல்
2. இலவசச் சீருடை பேணுதல்
3. உடன் பிறந்தவர்களுக்கு உதவுதல்.

10. "நம்மனைவர்" என்பது

1. பெற்றோரை 2. ஆசிரியர்களை 3. மாணவர்களை

11. "உம் கடன்" என்பது

1. உங்கள் பணி 2. உங்கள் விருப்பம் 3. உமது ஒழுக்கம்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

* ஆங்கிலச் சொற்களுக்கு 1 – 9 வரையான இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை இடம் மாறியுள்ளது. அவற்றை ஆதாரமாகக் கொண்டு கீழே உள்ள இரு வினாக்களுக்கும் விடை தருக.

BLACK	18854
CLOCK	25137
APPLE	35637

12. **CLOCK** – என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் பொருத்தமான இலக்கங்கள் எவை?

1. 25137 2. 18854 3. 35637

13. 2155 ஆகிய இலக்கங்களுக்குரிய ஆங்கிலச் சொல் எது?

1. BALL 2. BELL 3. CALL

14. ரூபாய் 100.00 இன் தாள்காசின் சிறிய கட்டு ஒன்று கிடைத்தது. அதின் தொடக்க இலக்கம் $\frac{U}{113}549702$ ஆகும். அதன் இறுதி இலக்கம் $\frac{U}{113}549711$ எனின் கட்டிலுள்ள காசின் பெறுமதி யாது?

1. ரூபா 900.00 2. ரூபா 1000.00 3. ரூபா 1100.00

15. அவதானித்து வெற்றுக் கூட்டில் வரவேண்டிய சரியான எண்களைத் தெரிவு செய்க?

2	1	3	1	4	1	5	1	6	1
9		16		25		.....		.....	


1. 36,49
2. 25,49
3. 25,45

16. இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை எத்தனை?




1. 3
2. 4
3. 5

17. கீழே உள்ள சுவரில் இடைவெளியில் வைத்துப் பொருத்த வேண்டிய கற்களின் எண்ணிக்கை யாது?



1. 5 கற்கள்
2. 6 கற்கள்
3. 7 கற்கள்


18. எண்கோலத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.



1. 20 2. 16 3. 10

www.lkedu.lk

19.



1. 11 2. 14 3. 28

20. ஒரு பலகையை 9 துண்டுகளாக வெட்ட நேரிட்டது. ஒரு துண்டு வெட்ட ரூபா 50.00 ஐக் கொடுக்க வேண்டும். எனின் வெட்டிய துண்டுகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

1. ரூபா 450.00 2. ரூபா 350.00 3. ரூபா 400.00

21. ஒரு வரிசையில் 7 பேர் நிற்கின்றார்கள். அவர்களுள் மூவர் ஆண்கள். பெண்ணுக்கு அடுத்து பெண் நிற்காவிடில் அவ்வரிசையில் நடுவில் நிற்பவர் யார்?

1. ஆண் 2.பெண் 3. நடுவே எவரும் இல்லை


22. 3, 4 எனும் இரு இலக்கங்களினாலும் மீதியின்றி வகுபடக்கூடியனவும் 20இற்கும் 50 இற்கும் இடையே உள்ள எண்களின் எண்ணிக்கை எத்தனை?

1. 2 2. 4 3. 3

23. ஞாயிற்றுக்கிழமை ஒரு வீட்டில் தொலைக்காட்சி மு.ப 8.00 தொடக்கம் பி.ப 12.30 வரைக்கும் கணினி மு.ப 9.30 தொடக்கம் 12.30 வரைக்கும் மின்விசிறி மு.ப 10.00 தொடக்கம் பி.ப 1.30 வரைக்கும் தொழிற்பட்டன. மூன்று உபகரணங்களும் ஒரே வேளை தொழிற்பட்ட நேரம்?

1. 1 மணித்தியாலம் 30 நிமிடம்
2. 2 மணித்தியாலயம்
3. 3 மணித்தியாலயம் 30 நிமிடம்

24.




மேற்குறித்த உருவிற்கேற்ப பின்வரும் எக்கூற்று சரியானது?

1. முக்கோணிகளின் எண்ணிக்கையை விட வட்டங்களின் எண்ணிக்கை ஒன்று அதிகம்
2. செவ்வகங்களின் எண்ணிக்கை வட்டங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு ஆகும்.
3. வட்டங்களின் எண்ணிக்கையை விட செவ்வகங்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகம் ஆகும்.

www.lkedu.lk


25. அருகேயுள்ள மடிக்கப்பட்ட உருவை விரிக்கும் போது தோன்றும் வடிவம் யாது?



1. 

2. 


3. 


26. 


அருகே சில கனவுருக்குற்றிகள் அடுக்கப்பட்டுள்ளன. அதனை முழுமையான ஒரு பெரிய கனவுருவாக்குவதற்குத் தேவையான கனவுருக் கட்டைகள் எத்தனை?


1. 7 2. 6 3. 5

27. பேனா பிடிக்கப்பட்ட கையை எடுக்காமல் வரைய முடியாத உருவம் பின்வருவனவற்றுள் எது?


1. 

2. 

3. 

28. 

அருகே உள்ள உருக்களுக்கு 10ற்கு குறைவான இலக்கங்களை இட்டு பெருக்கும்போது குறிப்பிட்ட விடை பெறப்பட்டது.



இவற்றின் பெறுமதிகள் முறையே

1. 5 3 2 2. 3 4 5 3. 1 2 4

* **2020ம் ஆண்டு ஜனவரி 01ம் திகதி புதன்கிழமையாகும்.**

29. 2020ம் ஆண்டு 12ம் மாதம் 31ம் திகதி என்ன கிழமையாகும்?

1. புதன் கிழமை 2. வியாழக்கிழமை 3. வெள்ளிக்கிழமை

30. 2020ம் ஆண்டு எத்தனை வியாழக்கிழமைகள் வரும்?

1. 51 2. 52 3. 53

* **கிராமத்தில் 55 பேரிடையே 33 பேர் ஆடு வளர்க்கின்றனர். 45 பேர் மாடு வளர்க்கின்றனர்.**

31. இரு பிராணிகளையும் வளர்ப்போர் எத்தனை பேர்?

1. 10 2. 23 3. 32

32. மாடு மட்டும் வளர்ப்போர் எத்தனை பேர்?

1. 22 2. 10 3. 23

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

* சுற்றுலா ஒன்றுக்கு பாமிலா15 தோசையும் கிஷானி 12 தோசையும் அபிராமி 17 தோசையும் கொண்டு வந்தனர். கிருஷாளினி உணவு எதையும் கொண்டு வரவில்லை. மூவரின் உணவை நால்வரும் சமமாகப் பங்கிட்டு உண்டனர். கிருஷாளினி தனது பங்கின் பெறுமதியான ரூபா 33.00ஐ மூவருக்கும் பகிர்ந்து கொடுத்தாள்.

33. பாமிலா பெற்ற பணம் எவ்வளவு?

1. ரூபா 3.00 2. ரூபா 12.00 3. ரூபா 18.00


34. அபிராமி பெற்ற பணம் எவ்வளவு?

1. ரூபா 3.00 2. ரூபா 12.00 3. ரூபா 18.00

35. முச்சக்கரவண்டிகளும் கார்களுமாக 12 இருந்தன. சில்லுகளின் எண்ணிக்கை 40 எனின் அங்கு நின்ற முச்சக்கர வண்டிகளும், கார்களும் முறையே?


1. 4, 8 2. 8, 4 3. 6, 6

36. சதுரமுகிகளை அவதானிக்குக C இற்கு எதிரான பக்கம் யாது?



1. F 2. A 3. E

37. உருவை அவதானித்து சரியான கூற்றைத் தெரிவு செய்க?



1. துஷாளினி, அஜந்தன், மதுவிழி ஆகியோர் வலைப்பந்தை மட்டும் விரும்புகின்றனர்.
2. கரப்பந்தாட்டத்தை பவிதன் மட்டும் விரும்புகிறார்.
3. துஷாளினி, ஜதுர்சிகா, கவினுஜன், பவிதன் ஆகியோர் இந்நான்கு விளையாட்டுக்களிலும் விருப்புடையவர்கள்

* கூட்டில் உள்ள சொற்களை அவதானித்து விடை தருக?

38. பூவும் பூவால் ஆன பொருளாகவும் அமைந்துள்ள சொல் எது?

.....

39. பூவும் அதனோடு தொடர்புடைய ஒரு பொருளாகவும் அமைந்துள்ள சொல்?

.....

பூந்தோட்டம்
பூமாலை
பூக்கடை
பூக்கூடை

40. கீழே உள்ள அமைப்பிற்கேற்ப இனங்கண்டு விடை தருக?

விலை ⟶ வேலை : சடை ⟶ சூடை எனின்

கூட்டம் ⟶ .....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

புலமைக்கதிர்

மாதிரி வினாத்தாள்- 2020

5

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-2020

5

பத்திரம் II

பெயர் :.....

1மணி 15நிமிடம்

01. பின்வரும் பாடலை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக?

எள்ளினும் சிறிய எறும்பைப் பார்! அது
எதையும் இழுத்துச் செல்வதைப்பார்!
உள்ளம் கொண்ட ஊக்கத்தால்
உன்னையும் கூட இழுத்துவிடும்!

1. இப்பாடல் எதனைப்பற்றிக் குறிப்பிடுகின்றது?

.....

2. மனம் என்பதன் ஒத்தசொல்லை எழுதுக.

.....

3. முன்னிலை ஒருமைச் சொல்லைத் தருக.

.....

4. சிறிய என்பதற்கு எதிர்ச் சொல் யாது?

.....

5. எறும்பிடம் காணப்படும் சிறந்த பண்பு யாது?

.....

6. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தானியம் எது?

.....

02. கீழ்க்காலும் சுழியும் அமைந்த சொல்லின் கீழ் கோடிடுக.

(காலம், நுங்கு, சூரியன், கோட்டை)

03. சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின்கீழ் கோடிடுக.

1. கைமாறு, கைம்மாறு, கைமாரு, கைமரு

2. ஆளுநர், ஆளுணர், ஆலுனர், ஆழுணர்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.lkedu.lk

04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. கிளியின் அலகு பலம் ..... (வாய்ந்தன, வாய்ந்தது)
2. மரப் பொந்துகளில் கிளிகள் ..... (வாழ்கின்றன, வாழும்)

05. பின்வரும் தொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. அகரவரிசைப்படி சொற் பொருள் கூறும் நூல் .....
2. தெருக்கள் கூடுமிடம் .....

06. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

(எனது தங்கையுடன் பாடசாலைக்கு நடந்து சென்றேன்.)

1. பயனிலை அடைமொழி ..... 2. எழுவாய் .....

07. பொருத்தமான நிறுத்தக்குறியீட்டைத் தருக.

ஐயா இந்தத் தங்கக் காசுகள் நீங்கள் தந்த உணவுப் பொதிக்குள் இருந்தது

08. பழமொழியின் கருத்தை உமது உரை நடையில் தருக?

சிறுதுளி பெரு வெள்ளம்.

.....

09. வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.



This is an .....



This is a .....

10. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப்படுத்துக.


இடமிருந்து வலம்

1. அப்பாவின் அண்ணன் (தமயன்) எனக்கு

3. இலங்கையின் கரையோரங்களில் இது காணப்படும்

மேலிருந்து கீழ்

2. பாடல் பாடுபவன்



11 தமிழ்க் கருத்தை எழுதுங்கள்

Take Care :- .....

May I come in? :- .....

12. சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் தருக.

முஹுண சோதன்ன :.....

ஔகே அடிரூல மொகக்த?

:.....

www.lkpou.lk

14. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு எழுதுக?

என்னால் ஆட முடியும் .....

15. பின்வரும் கூற்று யாரால் கூறப்பட்டது என எழுதுக?.

அமைதியாக ஓடிக் கொண்டிருப்பதே வாழ்க்கை .....

* பின்வரும் பிரச்சினைகளைத் தீர்க்குக?

16. இருபதாயிரத்து தொள்ளாயிரத்து எழு என்பதை இலக்கங்களில் எழுதுக?


.....

17. கோலத்தில் அடுத்துவரும் இரு தசமங்களையும் எழுதுக.


0.25, 0.5, 0.75, ... , ...


18. விளையாட்டுப் போட்டி ஒன்றில் 12 வயதுப்பிரிவில் 06 பிள்ளைகள் வீதம் 12 பாடசாலைகளும் 14 வயதுப்பிரிவில் 04 பிள்ளைகள் வீதம் 9 பாடசாலைகளும் கலந்து கொண்டன. எனின், கலந்து கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

.....

19.. 

1. நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாகத் தருக. .....
2. நிழற்றப்படாத பகுதியை தசமமாகத் தருக. .....

20. 



B பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு A பாத்திரத்தால் இன்னும் எத்தனை தடவைகள் நீர் உற்ற வேண்டும்? .....

21. நேத்திரா டீ.வியில் சனிக்கிழமை முப 11.30 மணிக்கு தொடங்கிய கல்வி நிகழ்ச்சி அதே தினம் பிப 1.55 மணிக்கு நிறைவடைந்தது எனின் நிகழ்ச்சிக்கான நேரத்தை மணித்தியாலயம், நிமிடங்களில் எழுதுக?

.....

22. அகல்யா வீட்டிலிருந்து பாடசாலைக்கு **2km 500m** தூரம் நடந்து வருவாள். பின்னர் **3km 350m** பஸ்வண்டியில் வருவாள் .அகல்யாவின் வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

.....

23. சர்மியா தன்னிடமுள்ள 56 இனிப்புக்களில் 8 இனிப்புக்களை தான் எடுத்துக் கொண்டு மீதியை தனது வகுப்புத் தோழிகள் 8 போருக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுத்தாள்.

1. தோழி ஒருத்தி பெற்ற இனிப்புக்கள் எத்தனை?

.....


2. சர்மியா தோழி ஒருத்தி பெற்றதை விட எத்தனை இனிப்புக்களை அதிகமாகப் பெற்றுக் கொண்டாள்?.

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.ikeau.lk

24.. தரப்பட்டுள்ள கடிகார முகத்தில் 2 மணி 45 நிமிடத்தினைக் குறித்துக் காட்டுக.




25. 5kg நிறை கொண்ட சீனிப் பொதியொன்றிலிருந்து 50 g சீனியை தான் மீதப்படுத்திக் கொண்டு ஏனையவற்றை 250g நிறை கொண்ட சிறிய பொதிகளாக அடைத்தான் எனின் அடைக்கப்பட்ட சிறிய பொதிகளின் எண்ணிக்கை யாது?

..... மீதி .....

26. 791 புத்தகங்களை ஒருவருக்கு 7 புத்தகங்கள் வீதம் எத்தனை பேருக்கு பகிர்ந்து கொடுக்கலாம்?

.....

27. வியாபாரி ஒருவன் தன்னிடமிருந்த 132 மாம்பழங்களில் கால் பங்கை விற்பனை செய்தான் எனின் எஞ்சிய மாம்பழங்கள் எத்தனை? .....



28. கிளிநொச்சி நகரத்தில் இருந்து ஏனைய இடங்களுக்கான தூரம் அருகே உள்ள வரைபடத்தில் தரப்பட்டுள்ளது.

1. மாங்குளத்திலிருந்து கிளிநொச்சி ஊடாக ஆனையிறவு செல்ல எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும்?

.....

2. யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி ஊடாக வவுனியா வரையான தூரம் யாது? .....

29. தொழிற்சாலை ஒன்றின் விபரம் அருகே உள்ளது.

தொழிற்சாலை	ஆண்	பெண்
ஆடை	345	470
தும்பு	129	116
மட்பாண்டம்	52	34
பீங்கான்	28	55

1. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஆண்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

2. எந்த தொழிற்சாலையில் கூடுதலான தொழிலாளர்கள் வேலை புரிகின்றனர்?

.....

30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

30. இலங்கையின் தேசிய மலர் எது?

1. நீலோற்பம் 2. அலரிப்பூ 3. வெட்சி

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

31 . இலங்கைக்கு உரித்தான பறவை எது?

1. மயில் 2. கிளி 3. காட்டுக்கோழி

32. புராதன இடங்களின் வரலாறு பற்றி அறிந்து கொள்ள முடியாதது எது?

1. தோட்டங்கள் 2. கல்வெட்டு 3. நினைவுச் சின்னங்கள்

33.  **படத்தில் உள்ளவர் பற்றி சரியான கூற்று?**

1. சிறந்த விஞ்ஞானி, எழுந்தாளர்
2. கெப்பட்டிப் பொலவில் பிறந்தவர்
3. சுதந்திர போராட்டத்தின் பிரதான தளபதி

34. உமது பிரதேசத்தில் நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த ஆலோசனைகள் பெறுவதற்கு அணுகவேண்டிய நிலையம்?

1. பொலீஸ் நிலையம் 2. வைத்தியசாலை 3. பொதுச்சுகாதார சேவை அலுவலகம்

35. பின்வரும் இயற்கை அனர்த்தங்களில் மனித நடவடிக்கையால் ஏற்படும் பிரதான காரணியாக அமைவது,

1. சுனாமி 2. நிலநடுக்கம் 3. வெள்ளப்பெருக்கு

36. உள்ளக விளையாட்டாக அமைவது?

1. மேசைப்பந்து 2. கரப்பந்து 3. கிளித்தட்டு

37. நீண்ட நாட்களின் பின் முளைக்கும் வித்து

1. கடுகு 2. பயறு 3. தேங்காய்

38. குறைந்த எண்ணிக்கையான மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் எது?

1. வடமாகாணம் 2. மேல்மாகாணம் 3. ஊவாமாகாணம்

39. தேசப்படத்தில் கடலை குறித்துக்காட்ட பயன்படும் நியம நிறம்?

1. சிவப்பு 2. கறுப்பு 3. நீலம் 3. நீலம்

40. சுவடுவரை சில்லு பயன்படுத்தப்படும் தொழில் எது?

1. மட்பாண்டத்தொழில் 2. நெசவுத்தொழில் 3. தையல் தொழில்

41. தமது தாய் மொழியுடன் இன்னொரு மொழியை அறிந்து வைத்திருப்பதனால் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று?

1. அதிகநேரம் உறவாடுதல்
2. இனங்களுக்கிடையிலான ஒற்றுமை
3. வேலை அதிகரிக்கும்

42. மீன்பிடித்தலில் பயன்படும் உபகரணம்?

1. நுகத்தடி 2. அத்தாங்கு 3. லாடம்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

43. மின்குமிழின் இழையை ஆக்கப் பயன்படும் உலோகம்?

1. பிளாற்றினம் 2. தங்குதன் 3. ஈயம்

44. மின்னேரியா குளத்தை கட்டுவித்த மன்னன்?


1. தேவநம்பீயதீசன் 2. மகாசேனன் 3. தாதுசேனன்

45. எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவை

1. தொடர்பாடல் 2. போக்குவரத் 3. வைத்தியசேவை

46. சக்தியைத் தரும் உணவு

1. பசளி 2. போஞ்சி 3. ஈரப்பலா


47.  **இக்கலை வடிவம்**

1. அரும்பு 2. கல்பிந்து 3. சவடி

48. "நான் எனது வீட்டுக்கும் பாடசாலைக்கும் நாட்டுக்கும் செய்ய வேண்டிய பொறுப்புக்களைச் செய்யும் பிள்ளையாவேன்" இவ் எண்ணம் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறைக்கு உரியதாகும்.

1. ஐந்தாம் 2. மூன்றாம் 3. நான்காம்

49. படத்தில் காட்டப்பட்டுள்ள உடுத்தொகுதி எது?



1. வேட்டைக்காரன்
2. சிம்மம்
3. கலப்பை

50. உலக சுற்றாடல் தினம் கொண்டாடப்படுவது?

1. யூன் 05 2. யூன் 15 3. யூலை 05

51. நெத்தலி மீனில் கூடுதலாகவுள்ள சத்து?

1. கல்சியம் 2. புரதம் 3. விற்றமின்

52. குப்பைக் கூளங்களில் அதிகம் பெருகுவது?

1. ஈ 2. நுளம்பு 3. தும்பி

53. வாயால் ஊதுவதன் மூலம் ஒலி எழுப்பப்படும் இசைக்கருவி எது?

1. வீணை 2. நாதஸ்வரம் 3. மேளம்

54. A9 பிரதான வீதி பயணிப்பது?

1. கண்டி – கொழும்பு
2. கொழும்பு – மட்டக்களப்பு
3. கண்டி – யாழ்ப்பாணம்

55. புகையூட்டல் மூலம் நீண்டகாலம் வைத்திருக்கக்கூடிய உணவுப் பொருள்

1. தேயிலை 2. மீன் 3. கருவாடு

www.ikeduk

56. தங்கக்கூரை இடப்பட்டுள்ள புனித வழிபாட்டுத்தலம் அமைந்துள்ள இடம்?

1. யாழ்ப்பாணம் 2. அநுராதபுரம் 3. கண்டி

57. உணவு சமைப்பவர் அணிந்திருக்கும் மேலங்கியின் பெயர்?

1. துடைதுண்டு 2. சூட் 3. ஏப்ரன்


58. மின்காந்த பயன்பாடு அல்லாத பொருள்

1. கப்பி 2. மோட்டார் 3. மின்மணி

59. வெளிநாட்டுக்கு அனுப்பும் கடிதங்களை இடும் தபாற்பெட்டியின் நிறம் யாது?

1. பச்சை 2. நீலம் 3. சிவப்பு

60. கீழேயுள்ள படத்தைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம் பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இடம் பெறுதல் வேண்டும்.



1. .....

.....

2. .....

.....

3. .....

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

புலமைக்கதிர்

மாதிரி வினாத்தாள்- 2020

5

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-2020

6

பத்திரம் I

சுட்டெண் :.....


45 நிமிடம்

● 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்ட மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.


● முதலாம் இரண்டாம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.

01.





1.



2.



3.

02.





1




2



3

● தரப்பட்ட உருக்களின் கூட்டத்தில் முதலில் தரப்பட்ட உருவிலிருந்து வேறுபடும் உருவைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக?

03.





1.



2.



3.

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்


WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

04.



1. 2. 3.

● 5ம், 6ம் வினாக்களுக்கு அருகேயுள்ள படத்தைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக?




03. இப்படம் குறிப்பிடுவது

1. கலங்கரை விளக்கு
2. தொலைத்தொடர்புக் கோபுரம்
3. தாமரைக் கோபுரம்

04. இது இலங்கையில் காணப்படும் இடங்களில் ஒன்று?


1. அனுராதபுரம்
2. குருநாகல்
3. காலி

07. உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 10
2. 11
3. 12

08.



உருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1. 14
2. 15
3. 16

* பின்வரும் கவிதையைக் கொண்டு 9ம், 10ம் வினாக்களுக்க விடை தருக?

அழகாய் ஆடுது மயில்
இனிதாய் பாடுது குயில்
விரைந்து ஓடுது ரயில்
வாழ்வில் உயர.....

09. கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல் எது?

1. தவில் 2. நயில் 3. பயில்

10. பாடல் எதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது?

1. நன் நடத்தை
2. சிறந்த கல்வியை கற்றல்
3. நற்பணப்புகளை விருத்தி செய்தல்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.lkedu.lk

11. எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க?


1. ஒளிமயமான எதிர்காலம் தோன்ரும்
2. ஒளிமயமான எதிர்காலம் தோன்றும்
3. ஒழிமயமான எதிர்காலம் தோன்றும்

12. "சிம்மாசனம்" என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கக்கூடிய ஒரு சொல்

1. மனம் 2. சினம் 3. மாதம்

* வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க?

12. 7 15 23 1) 17
15 23 31 2) 41
23 31 ..... 3) 39

14. 

1) 6
2) 8
3) 10

15. "பரீட்சை மிகவும் சுலபமானது", "சித்தி பெறுவது என்பது இலகுவானது" என்று கூறித்திரியும் தரணி பயத்தினால் பரீட்சைக்கே தோற்றவில்லை, இதற்குப் பொருத்தமான பழமொழி

1. முயற் கொம்பிற்கு அலைதல்
2. பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை
3. ஆனைக்கும் அடி சறுக்கும்.

16. எழுதுவதற்கு பென்சில் இல்லாமல் திண்டாடிய சீலனுக்கு குகன் தனது பென்சிலை இரண்டாக்கி பாதியைக் கொடுத்து உதவினான். இச் செயலுக்குப் பொருத்தமான பழமொழி

1. சிறுதுளி பெரு வெள்ளம்
2. மனமுண்டானால் இடமுண்டு
3. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

* ஒரே கருத்தை வேறு விதமாக குறிப்பிடும் இரண்டு கூற்றுக்களைத் தெரிவு செய்க?

17. A – குகன் என்னை விட மூத்தவன் 1. A, C
B – நான் குகனிலும் இளையவன் 2. A, B
C – அவன் எனது வயதை ஒத்தவன் 3. B, C

18. A – நவீன தொலைபேசிகளின் வருகை உலகைச் சுருக்கி விட்டது
B – தொலைபேசியை கண்டுபிடித்தவர் அலெக்சாண்டர் கிரகம் பெல்
C – தொலைத் தொடர்புகளை தொலைபேசி இலகுவாக்கியுள்ளது

1. A, C 2. A, B 3. B, C


திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.lkedu.lk

19. உணவகம் ஒன்றில் நீலநிறப் பீங்கானிற்கு மேல் 8சிவப்பு நிறப் பீங்கான்களும் 7சில்வர் நிறப் பீங்கான்களும் அடுக்கப்பட்டிருந்தது. நீல நிறப் பீங்கானிற்கு கீழ் 4 பச்சை நிறப் பீங்கான்களும் 12 வெள்ளை நிறப் பீங்கான்களும் உள்ளன. அதன்படி அங்குள்ள பீங்கான்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 35 2. 31 3. 32


20. முழு உருவின் சுற்றளவு நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்.



1. 2 2. 4 3. 3

21. வகுப்பறையில் உள்ள பெண்பிள்ளைகளில் பாமிலா யாழினியிலும் பார்க்க உயரம் கூடியவள். சரண்ஜா பாமிலாவிலும் பார்க்க உயரம் கூடியவள். இம் மூன்று பேரிலும் உயரம் குறைந்த, உயரம் கூடியவர்கள்முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க?

1. பாமிலா, யாழினி 2. யாழினி, பாமிலா 3. யாழினி, சரண்ஜா


22. 

அருகில் உள்ள உருவிற்கு அருகருகே ஒரே நிறம் வராதவாறு நிறந் தீட்டுவதற்கு எத்தனை நிறங்கள் தேவைப்படும்.


1. 9 2. 3 3. 5


23. காலை 9.00 மணிமுதல் காலை 11.15வரையான நேரத்திற்குள் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையேயுள்ள கோணம் செங்கோணத்திலும் பார்க்க கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பம் எந்த நேரத்திலாகும்?


1 9.10 2. 10.30 3. 10.55

24. 

உருவிலுள்ள சதுரமுகியிலுள்ள 3எழுத்துக்கள் போன்று அடுத்த 3பக்கங்களிலும், எதிர்ப்பக்கங்களில் அதே எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன அதனை விரிக்கும் போது பெறப்படும் சரியான வடிவம் எது?

1. 

2. 

3. 

25. மணிக்கு 40km வேகத்தில் செல்லும் பேருந்து வண்டியொன்று 2மணித்தியாலங்கள் 15 நிமிடங்களில் செல்லும் தூரம் யாது?

1. 60km 2. 100km 3. 85km

26. ஒரு சதுரங்கப் போட்டி 100 நிமிடம் வரை நீடித்தது. விளையாட்டு பி.ப 3.00மணிக்கு ஆரம்பமானதாயின் எத்தனை மணிக்கு முடிந்திருக்கும்?

1) பி.ப 4.40 2) பி.ப 4.00 3) பி.ப 5.10

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.ikedu.lk

பின்வரும் தகவல்களைக் கொண்டு 27, 28ம் வினாக்களுக்கு விடை தருக?

3 பென்சில்களின் விலை ரூபா 36.00 இரண்டு பேனைகளின் விலை 3பென்சில்களின் விலையிலும் ரூபா6.00 குறைந்தது. கொப்பியின் விலை பேனை ஒன்றினதும் பென்சில் ஒன்றினதும் விலைகளின் கூட்டுத் தொகைக்குச் சமன்.

27. ஒரு பேனையின் விலை யாது?

1. ரூபா 12.00 2. ரூபா 15.00 3. ரூபா 21.00

28. ஒரு கொப்பியின் விலை எவ்வளவு?

1. ரூபா 27.00 2. ரூபா 30.00 3. ரூபா 45.00.

29. கடலில் நிதமும் இருப்பவை?

1. அலைகளும் மீன்களும்
2. மீன்களும் நீரும்
3. நீரும் உப்புச் சுவையும்

30. ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை?

1. எழுத்துக்களும் கருத்தும்
2. நிறுத்தற்குறியும் அச்சும்
3. கருத்தும் அச்சுப்பிழையும்

* பை ஒன்றின் பச்சை, மஞ்சள் சிவப்பு, நீலம், ஊதா ஆகிய நிறங்களில் பலூன்கள் இருந்தன.

மதுவிழி – பச்சை, மஞ்சள், சிவப்பு – ஆகிய நிறங்களையும்
கஸ்தூரி – மஞ்சள், சிவப்பு, நீலம் – ஆகிய நிறங்களையும்
மொழியரசி – ஊதா, மஞ்சள், சிவப்பு – ஆகிய நிற பலூன்களையும் எடுத்துக் கொண்டனர்.

31. மதுவிழி, மொழியரசி ஆகியோர் பெறாத ஆனால் கஸ்தூரி மாத்திரம் பெற்ற நிறம் எது?

1. நீலம் 2. சிவப்பு 3. ஊதா

32. மதுவிழி, கஸ்தூரி ஆகியோர் பெறாத ஆனால் மொழியரசி மாத்திரம் பெற்ற நிறம் எது?

1. நீலம் 2. சிவப்பு 3. ஊதா

33. தோடு – நகை ஆயின் மேசை – .....

1. கதிரை 2. முக்காலி 3. தளபாடம்

34. மண்வெட்டி – தோட்டம் எனின் உளி – .....

1. பலகை 2. தச்சகம் 3. கம்மாலை

35. பன்னிரண்டாவது ஒற்றை எண் யாது?


1. 21 2. 23 3. 19

36. நான்கு மனிதர் 4 நாட்களில் செய்யும் வேலையை இரண்டு மனிதர் எத்தனை நாட்களில் செய்வார்கள்?

1. 12 2. 8 3. 6

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

அருகேயுள்ள உருவை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக?



37. இதன்படி ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

1. 5 2. 10 3. 12

38. இதன்படி கரப்பந்தாட்டம் விளையாடாத பிள்ளைகள் எத்தனை பேர்?

1. 5 2. 12 3. 7

39. குமார் ஒரு மணித்தியாலயத்தில் செய்து முடிக்கும் வேலையை முகுந்தன் 25 நிமிடங்களில் செய்துமுடிப்பான். முகுந்தன் 1 மணி 40 நிமிடத்தில் செய்து முடிக்கும் வேலையை குமார் எவ்வளவுநேரத்தில் செய்து முடிப்பான்?

1. 3 மணித்தியாலம் 40 நிமிடம்
2. 4 மணித்தியாலம் 15 நிமிடம்
3. 4 மணித்தியாலம்

40. வகுப்பிலுள்ள பிள்ளைகளில் ஒவ்வொரு 8 பேருக்கும் 3 பேர் பரீட்சையில் சித்தியடையமாட்டார்கள் என அறியப்பட்டது. அதன்படி சித்தியடையக் கூடியவர்கள் 25 பேர் எனில் அவ்வகுப்பிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?

1. 35 2. 45 3. 40

www.lkedu.lk

புலமைக்கதிர்

5

மாதிரி வினாத்தாள்- 2020

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-2020

6

பத்திரம் II

சுட்டெண் :.....

1மணி 15 நிமிடம்

01. பின்வரும் பாடலை வாசித்து விடை தருக?

அழுக்கில்லா ஆடைமேன்மை ! அதை
அணிவதாலல்லவோ உடற்குண்டாம் தூய்மை
ஒழுங்கோடு நூல்களைத் தூக்கி - நில்லாது
ஓடடி ஓடடி பள்ளியை நோக்கி

கற்பிப்போர் கண் கொடுப்போரே - அந்தக்
கணக்காயா உரையினில் இரு செவி சேரே !
நற்பெயர் எடுத்திட வேண்டும் ! - நாளும்
நன்றாகப் படித்து நீ முன்னேற வேண்டும் !

1. தூய்மை உண்டாக நாம் என்ன செய்ய வேண்டும்?

.....

2. ஆசிரியரை எவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது?

.....

3. நற்பெயர் எடுத்திட நாம் செய்ய வேண்டியது?

.....

4. முன்னிலைப் பெயர்ச் சொல்லை எழுதுக ?

.....

5. பெயர்ச் சொல் ஒன்று தருக ?

.....

6. இப்பாடலில் அதிகம் வந்துள்ள உயிர்க்குறியின் பெயரை எழுதுக ?

.....

02. பின்வரும் சொற்களில் உள்ள இடைவெளி நிரப்புக?

1. பா .... காய்

2. சா வி .... வை

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

03. அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?

(மரம், கண், பறவை, வட்டம், செலவு, இரவு)

1. குணப்பெயர் .....
2. சினைப்பெயர் .....
3. தொழிற்பெயர் .....

04. அடைப்பினுள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக?

1. சனக்கூட்டம் மெல்ல மெல்ல கலையத்.....(தொடங்கின, தொடங்கியது)
2. சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட மான் ஓடி .....(ஒழிந்து, ஒளிந்து) கொண்டது.
3. அண்ணனுடன் தம்பியும் கடைக்குச் ..... (சென்றான், சென்றனர்).

05. வாக்கியங்களில் உள்ள எழுவாய்ச் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக?

1. மாணவர்களை வரிசையாக வருமாறு அதிபர் கூறினார்

   எழுவாய் :- .....

2. மன்னன் மாறுவேடம் தரித்து வந்தான்.

   பயனிலை :- .....

06. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக?

தமிழாசிரியர் அழகின் சிரிப்பு என்ற பாடலைப் பாடிக் காட்டினார்

07. பின்வரும் தனிச் சொல்லை எழுதுக?

1. படங்கள் வரைபவன் .....
2. நம்பமுடியாத கதை .....


08. கடித உறையில் இடம் பெறும் விடயங்கள் மூன்றை உரிய புள்ளிக் கோட்டில் எழுதுக?


.....

.....

.....

09. பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலச் சொல்லினை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக?





திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

10. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் தருக?

What's your school ?.....

11. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்தில் ஆங்கில எழுத்தில் எழுதுக?

நான் உமக்கு உதவ முடியுமா .....

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக?

1. am / the / canteen / I / to / going .....

13. பின்வரும்சொற்களின் சிங்கள வகடகியங்களை தமிழில் எழுதுக?

1. சகோதரயா .....
2. மெத்தன இன்னே .....

14. பின்வரும் வாக்கியங்களுக்கான சிங்கள உச்சரிப்பினைத் தமிழில் எழுதுக?

1. அங்கே பாருங்கள் .....
2. நான் ராதா, நீங்கள் யார்? .....

15. சொற்களில் எழுதுக? 41085 .....

16. 1. எண் கோலத்தில் அடுத்து வரும் எண்ணை எழுதுக? 2420, 2415, 2410 .....

2. 0.7, 0.3, 1.1, 05 எனும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக?

.....


17. 4662 4194 5087 4815 4138

1. மேலே உள்ள எண் அட்டைகளை ஏறுவரிசைப்படுத்தினால் நடுவில் வரும் எண் யாது?

.....

2. இரட்டை எண்களைக் காட்டும் எண்களின் கூட்டுத் தொகை யாது?

.....

18. 

1. இத்தாளை வெட்டி ஒட்டுவதன் மூலம் கிடைக்கும் திண்ம உருவின் பெயர் யாது? .....
2. இதன் உச்சிகள் எத்தனை? .....

19. புகழவன் முற்பகல் எட்டுமணி பதினைந்து நிமிடத்திற்கு அலுவலகத்திற்குச் சென்று பிற்பகல் இரண்டு மணிக்கு அலுவலகத்திலிருந்து வீடு நோக்கிப் புறப்பட்டான் .

1. அவன் அலுவலகத்தில் செலவழித்த நேரம் யாது? .....
2. அவன் அலுவலகத்திற்கு சென்ற நேரத்தை 24 மணிநேரக்கடிகாரமாக்கி எழுதுக?

.....


20. 6பென்சில்கள் வீதமுள்ள ஐந்து பெட்டிகளும் 12 பென்சில்கள் வீதமுள்ள நான்கு பெட்டிகளும் உள்ளன. அங்குள்ள பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....


www.lkedu.lk

21. மூன்று லீற்றர் கனவளவுடைய பெரிய வெற்றுப் பாத்திரம் ஒன்றை 700 ml கொள்ளக்கூடிய சிறிய பாத்திரம் ஒன்றினால் கவனமாக ஐந்து தடவைகள் ஊற்றி நிரப்பும் போது சிறிய பாத்திரத்தில் எஞ்சும் நீரின் கனவளவு யாது? .....

22. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக?



இருந்து	வரைக்கும்	தூரம்
யாழ்ப்பாணம்	கிளிநொச்சி	77Km
யாழ்ப்பாணம்	வவுனியா	154Km
வவுனியா	மன்னார்	.....
கிளிநொச்சி	மன்னார்	.....

23. 

உருவில் உள்ள உருளையில் இருக்கும் தட்டையான மேற்பரப்புக்கள்எத்தனை? .....

24. 12cm நீளமும் 1cm அகலமும் கொண்ட ஆறு செவ்வகக் கீலங்கள் ஒவ்வொன்றும் 3cm அளவில் ஒன்றன்மீது ஒன்று வைத்து தொடராக ஒட்டும்போது கிடைக்கும் கீலத்தின் மொத்த நீளம் யாது?


.....


* வரிப்பட உதவியுடன் வினாவிற்கு விடை தருக.



25. இதன்படி பூசணிக்காயின் நிறையைத் தருக?

.....



26. 

மரத்திலுள்ள அப்பிள் பழங்களின் எண்ணிக்கையை உரோம எண்ணில் தருக.


.....

27. அதிபரிடம் 810 பென்சில்கள் இருந்தன. ஒருவருக்கு 4வீதம் இருக்குமாறு எத்தனை பேருக்குக் கொடுக்கலாம் மீதி எத்தனை? ..... (மீதி.....)


28. 1. இவ் உருவிற்குள்ள சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?

.....

2. அதனை / அவற்றை உருவில் வரைந்து காட்டுக?



29. நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?



.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

30. நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணி அல்லாதது?

1. சிரேன் 2. சலமந்தரா 3. சிப்பி

31. பின்வருவனவற்றுள் மண்ணினுள் வாழும் பிராணி?

1. குரங்கு 2. மரஅட்டை 3. பிள்ளைப்பூச்சி

32. ஆன்மீக தகைமைக்காக நாளாந்தம் செய்ய வேண்டியது?

1. உபவாசம் இருத்தல்
2. சூரிய நமஸ்காரம் செய்தல்
3. வழிபாட்டில் ஈடுபடல்

33. வருடந்தோறும் பூக்களைத் தரும் தாவரம் எது?

1. தாமரை 2. மா 3. நித்திய கல்யாணி

34. ஔடதமாகப் பயன்படும் தாவரவகை எது?

1. கத்தரி 2. புடோல் 3. ஆடாதோடை

35. பின்வரும் நகரங்கள் வரலாற்றுப் புகழ்மிக்க ஓர் நகரம் எது?

1. மிகிந்தலை 2. ஹட்டன் 3. கிளிநொச்சி

36. கண்டி இராட்சியம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த அன்னிய நாட்டவர்?

1. போர்த்துக்கேயர் 2. பிரான்சியர் 3. ஆங்கிலேயர்

37. அச்சிடப்பட்ட சில புத்தகங்களின் அட்டையில் காணப்படும் இலச்சினை

1. SLS 2. ISO 3. ISBN

38. களனிகங்கை கடலுடன் கலக்கும் இடம்


1. திருகோணமலை 2.அம்பாந்தோட்டை 3. கொழும்பு

39. மின்சாரத்தைக் கடத்தக்கூடிய பொருள் ஒன்று

1. இரும்புத்தகடு 2. மரப்பலகை 3. இறப்பர்

40. உருவில் உள்ள உடுக்கோலத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?


1. சிறுகரடி
2. சிம்மம்
3. பெருங்கரடி



41. அகழ்வுக் கைத்தொழிலில் பயன்படும் உபகரணம் ?

1. நாம்புவ 2. பட்டடை 3. மடி

42. உப்பு பக்கெற்றில் இக்குறியீடு குறிப்பிடுவதற்கான முக்கிய காரணம்



1. உப்பைக் கழுவக் கூடாது என்பதால்
2. தேவையான சில போசணைப் பதார்த்தங்கள் கரையக்கூடும் என்பதால்
3. உப்புக்கு அசுத்தமான பொருட்கள் சேரும் என்பதால்

www.ikedu.lk

43. 

திசையறி கருவியில் திசையை அறிவதற்காக பயன் படுத்தப்பட்டுள்ள பொருள்?

1. பித்தளை
2. செம்பு
3. காந்தம்

44. இலங்கையில் "மடுமாதா" ஆலயம் அமைந்துள்ள மாவட்டம்

1. மன்னார் 2. வவுனியா 3. மடு

45. பணத்தை வைப்பிலிடவும், மீளப் பெறவும் செல்ல வேண்டிய இடம்?

1. தபாலகம் 2. பொலிஸ்நிலையம் 3. வங்கி

46. பூனை மிகவும் விரும்பி உண்ணும் செடி எது?

1. 
2. 
3. 

47. தீதாளைப் பயன்படுத்தும் தொழிலாளி

1. மேசன் 2. பொற்கொல்லன் 3. தையற்காரன்

48. கட்புல செவிப்புல சாதனம் ஒன்று?

1. கணனி 2. வானொலி 3. தொலைபேசி

49. மனிதனின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் விலங்கு அல்லாதது?

1. நுளம்பு 2. அட்டை 3. மண்புழு

50 உடல் வளர்ச்சிக்குரிய உணவு?

1. சோறு 2. கரட் 3. பயறு

51. பின்வருவனவற்றில் எந்த விலங்கு பொருளாதார ரீதியில் பயன்தரும் உற்பத்திப் பொருளை ஆக்குகின்றது?

1. தேனி 2. குளவி 3. வண்ணத்துப்பூச்சி

52. சூரியனுக்கு மிகத்தொலைவில் இருக்கும் கோள் எது?

1. புவி 2. புதன் 3. நெப்தியூன்

53. இலங்கையில் ரயர் உற்பத்திக்குப் புகழ்பெற்ற இடம்

1. வெலிசார 2. களனி 3. அம்பேவெல

54. இறைச்சியை மட்டும் உணவாகக் கொள்ளும் விலங்கு?

1. நாய் 2. பூனை 3. புலி

www.lkeuk

55. மின்னல் ஏற்படும் போது எம்மை பாதுகாக்க மிகவும் உகந்த முறை

1. மரத்தின் கீழே நிற்றல்
2. சமவெளியில் நிற்றல்
3. வீட்டில் கட்டிலின் மீது இருத்தல்

56. தனது வீடாகப் புற்றை அமைக்கும் பிராணி எது?

1. குளவி 2. கறையான் 3. பாம்பு


57. இலங்கையின் முதலாவது இராசதானி

1. தம்பதெனியா 2. அனுராதபுரம் 3. யாப்பகூவா

58. மின்சாரத்தடைக்காக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

1. 119 2. 1919 3. 1987

59. படத்தில் காணப்படும் பிராணி நடை



1. தவளைப் பாய்ச்சல்
2. வாத்து நடை
3. குதிரை நடை

60. பின்வரும் காட்சிப் படத்தைக் கொண்டு நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக? ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம் பெறுதல் வேண்டும்.



1. .....

.....

2. .....

. .....

3. .....

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---



மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-

7

2020

பத்திரம்- II

சுட்டெண் :.....

1 மணி 45 நிமிடம்

01. பின்வரும் பாடலை நன்றாக வாசிக்க.

பாற்குடமுஞ் சுமந்து
பையப்பைய நடந்து
சந்தைக்குப் போம்போது
தான் நினைத்தாள் மாது
'பாலையின்று விற்பேன்
காசைப்பையில் விற்பேன்'

வினாக்களுக்குரிய விடைகளைப் பாடலிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. சந்தையில் எதை விற்பதாக இப் பெண் கூறுகின்றாள்?

.....

2. பெண் என்ற சொல்லுக்கான ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

.....

3. இங்கு இடம்பெற்றுள்ள இரட்டைக் கிளவிச் சொல்லை எழுதுக?

.....

4. "போம்போது" என்பதன் திருத்தமான எழுத்து வடிவத்தை எழுதுக?

.....

5. இடப்பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக?

.....

6. "பாற்குடம்"என்பதனைப் பிரித்து எழுதுக?

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

02. (அ) வெற்றிடத்திற்குப்பொருத்தமான சொல்லை அடைப்பினுள் தெரிந்து அதன்கீழ் கோடிடுக?

1. டிலக்சி கடையில் ..... வாங்கினாள் (சவுக்காரம், சவர்க்காரம்)
2. நீங்கள் புரிந்த உதவிக்கு என்ன ..... (கைம்மாறு, கைமாறு) செய்வேனோ தெரியாது.
3. எனது ஆடையில் ..... (கரை, கறை) படிந்திருந்தது.

(ஆ) சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக?

1. ஆட்டுக்குட்டி / ஓடியது / துள்ளித் துள்ளி / வேகமாக

.....

2. ஆத்திசூடியானது / மிக / இனிமையாகவும் / கற்பதற்கு / இருக்கிறது / எளிமையாகவும்

.....

03. வெற்றிடத்திற்குப்பொருத்தமான விடையைத் தெரிந்து எழுதுக?

1. தமிழ்மொழியில் ..... உயிரெழுத்துக்கள் உள்ளன. (பதினெட்டு, பன்னிரண்டு, முப்பது)
2. துரியோதனச் சக்கரவர்த்தியே ..... அங்க தேசத்தை நன் கொடையாகக் கொடுத்திருந்தார் (கௌசிகமுனிவருக்கு, கர்ணனுக்கு, மகாபிரபுவிற்கு)
3. வில்லியம் ஹோக்கிங் இங்கிலாந்திலுள்ள ..... நகரில் பிறந்தார். (மிலான், கெந்தக்கி, ஒக்ஸ்பேர்ட்)

04. பாடல்களின் அடியைப் பூர்த்தி செய்க.

1. கண்ணில்லாத வெருளி என்று
   காய்கள் கவலை கொண்டன
   .....
   அதற்கு வந்து குந்தினார்.

2. மாடு வந்து பார்த்தது
   மனிதன் மீசை கண்டது
   நாடு காடு தாண்டியே
   .....

05. தரப்பட்ட சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

(புத்தகங்கள், ஓடிய, மரம், நான், கூறினேன்)

1. தன்மை ஒருமை வினைச் சொல் :- .....
2. பெயரெச்சம் எது? :- .....
3. அ∴றினைப் பன்மைப் பெயர்ச்சொல்:- .....

08. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக?

1. சீப்புக்கும் வாழைப்பழத் தோலுக்கும் என்ன வித்தியாசம்
2. ஆறுவது சினம் என்பதன் கருத்து யாது

07 தொக்கம் 09 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

07. எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா ..... (பவளவிழா, பொன்விழா)
08. பயத்தினால் என்மனம் ..... வென அடித்தது. (கடகட, படபட)
09. யானைக் கூட்டம் நீரருந்த ..... (வந்தன, வந்தது)

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.ikedu.lk

10. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக?

1. Open your books

.....

2. Please clean the blackboard

.....

11. பின்வரும் வாக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுக?

1. நீங்கள் தயாரா?

.....

2. தண்ணீர் குடிப்பேன்

. .....

12. வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை எழுதுக?

1. Hos.....ital 2. Env.....lope

13. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக?

1. கால் கழுவுங்கள்? .....
2. கழுவுங்கள் கை கழுவுங்கள்? .....

14. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக?

1. வேலாவ துனய் .....
2. ஒபே அங்கய கீயத? .....

விடைகளை வெற்றிடத்தில் கணித்து எழுதுக?

15. அ. தரப்பட்ட எண்ணைச் சொற்களில் எழுதுக?

39099 :-.....

ஆ. நாற்பத்தெட்டாயிரத்து நானூற்று எண்பது என்பதை இலக்கத்தில் தருக?

.....

16. பின்வரும் உரோம எண்களை எழுத்துக்களில் எழுதுக?

i. XIV :- .....

ii. IX :- .....

17. அடுத்துவரும் எண்களை வெற்றிடத்தில் தருக?

3 4 6 8 ....

18. அட்டவணையின்படி வினாக்களுக்கு விடை தருக?

பெயர்	பெற்றபுள்ளிகள்
W	8346
X	7709
Y	6057
Z	4171

1. Xஉம் Yஉம் பெற்ற புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

2. Zஐவிட W எத்தனை புள்ளிகளைக்கூடுதலாகப் பெற்றார்?.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

19. பின்வருவனவற்றைத் தசம எண்களாகத் தருக?

1. $\frac{7}{10}$ ..... 2. $\frac{3}{10}$ .....

20. பின்வரும் கட்டத்திலுள்ள எண்களை ஏறு வரிசைப் படுத்தினால் வேதாக வரும் எண் யாது?

62	36	15	23
39		54	38

.....

21. வாணியின் வகுப்பிலுள்ள கடிகாரம் நியம நேரத்தையே காட்டும் அதனடிப்படையில் அது **13:15h** என நேரம் காட்டுமாயின் அந்நேரத்தை சாதாரண நேரத்தில் எழுதிக்காட்டுக?

.....

22. 603 தேங்காய்களை மூன்று குவியல்களாகப் பிரிக்கப்பட்டது எனின் ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.....

23. திவ்வியா யதுஷாவைக் காட்டிலும் மூன்று மடங்கு பணம் வைத்திருந்தாள். திவ்வியா ரூபா 12.00ஐக் கொடுத்தால் இருவரும் சம அளவான பணம் வைத்திருப்பார்கள் எனின், திவ்வியா முதலில் வைத்திருந்த பணம் எவ்வளவு? .....

24. 1500ml கொள்ளளவு உள்ள ஒரு பாத்திரத்தில் 750ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 950ml நீரை ஊற்றும்போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது? .....


25. சன்சிகனிடம் குறிப்பிட்ட அளவு முத்திரைகள் இருந்தன. அதை அவன் நான்கு நண்பர்களுக்கும், தனக்கும் சமமாகப் பகிர்ந்து கொண்டான். நண்பனொருவன் பெற்ற முத்திரைகள் 17 எனின் சன்சிகனிடம் ஆரம்பத்திலிருந்த முத்திரைகள் எத்தனை?

.....

26. 3kg 250g தேயிலையிலிருந்து எத்தனை $^1/_4$kg கொண்ட பைக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?

.....

27. இதன்படி தோடம்பழங்களின் எண்ணிக்கை 105 ஆகும்.



1. மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.....

2. மொத்தமாக எத்தனை பழங்கள் உள்ளன?

.....

28. **AB = BC**


DE = CDயின் 1/2 வாசியாகும்.

1. **DC யின் நீளம் யாது?**

.....


2. **Aயிலிருந்து B,C,D ஊடாக E வரையான தூரம் யாது?**

.....



திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

29. இக்கடிகார முகம் காட்டும் நேரம் யாது?



.....

30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து கோடிடுக

30. இலங்கைக்கு மேற்கே அமைந்துள்ள நாடு எது?

1. மலேசியா 2. ஆபிரிக்கா 3. இந்தியா

31. மீனின் சுவாச உறுப்பு எது?

1. பூ 2. செட்டை 3. வால்

32. அழகு சாதனப் பொருட்களில் சேர்க்கப்படும் தாவரம்

1. வெற்றிலை 2. பிரண்டை 3. கற்றாளை

33. உறிஞ்சிகள் மூலம் புதிய கன்றுகளை பெறும் தாவரம்,

1. வல்லாரை 2. மிளகாய் 3. அன்னாசி

34. மண்ணில் காணப்படும் மரக்கட்டைகள், தடிகள், குச்சிகள் போன்ற பொருட்களை உக்கலடையச் செய்வது எது?

1. நத்தை 2. எலி 3. கறையான்

35. பின்வருவனவற்றில் வெள்ளை நிறப்பூவையுடைய தாவரம் எது?

1. மிளகாய் 2. கத்தரி 3. வெண்டி

36. பழுதடையும் போது பூவின் நிறம் மாறுதல், துர்மணம் வீசுதல், நசியும் தன்மை கொண்டிருப்பது

1. பழங்கள் 2. மீன் 3. கத்தரிக்காய்

37. இலங்கையில் அனல்மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள இடம்

1. யாழ்ப்பாணம் 2. நுரைச்சோலை 3. வவுனியா

39. குழு விளையாட்டில் அடங்காதது?

1. தட்டெறிதல் 2. கரப்பந்து 3. காற்பந்து

40. இலங்கையின் தேசிய சின்னம் அல்லாதது?

1. பண்டா 2. காட்டுக்கோழி 3. நாகமரம்

41. நாக்கின் உதவியுடன் பூச்சிகளைப் பிடித்து உண்பது,

1. முதலை 2. பல்லி 3. காகம்

42. 'வானத்திலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்திற்கு பயன்படாது வீணே கடலைச்சென்றடைய விடமாட்டேன்' எனக் கூறிய இலங்கை மன்னன் யார்?

1. எல்லாளன் 2. பராக்கிரமபாகு 3. விஜயன்

43.  இவ்வுடுத்தொகுதியின் பெயர் யாது?

1. துலாம்
2. மேடம்
3. கும்பம்

44. மாலை வேளை வானவில் தோன்றும் திசை யாது?

1. கிழக்கு 2. மேற்கு 3. தெற்கு

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

45. செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற இடம் அல்லாதது?

1. எம்பக்க 2. யாப்பகூவ 3. தலதாமாளிகை

50. நிலக்கண்ணிவெடிகளை இனங்கண்டு அழிப்பதற்கு மனிதனுக்கு உதவுகின்ற பிராணி?

1. நாய் 2. யானை 3. அணில்




46. நாம் ஒவ்வொருநாளும் சுயசுத்தத்தைப் பேணவேண்டும் இதற்கான காரணமாக அமைவது,

1. தொற்றுநோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்
2. முரண்பாட்டினை அதிகரிக்க முடியும்
3. எமது விளையாட்டு நிகழ்விற்கு உதவமுடியாமை

47. தான் உண்ட உணவை ஓய்வு வேளைகளின் போது இரைமீட்டு உண்ணும் பிராணி

1. பூனை 2. முதலை 3. ஆடு

48. பின்வருவனவற்றுள் எளிய மழைமானியைச் சரியாகக் காட்டுவது எது?

49. 

பின்வரும் இலச்சினை காணப்படக்கூடிய இடமாக அமைவது

1. தொலைபேசி வசதிகள்
2. இலங்கை ரூபவாஹினி
3. இலங்கை அஞ்சல் திணைக்களம்

50. இலங்கைக்கு நோன்பு காலங்களில் கூடுதலாக இறக்குமதி செய்யப்படும் பழவகை எது?

1. தோடம்பழம் 2. றம்புட்டான் 3. பேரீச்சம்பழம்

51. அரச திணைக்களங்களில் தகவல்களைப் பெற அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

1. 1929 2. 119 3. 1919

52. போர்த்துக்கேயர் இலங்கைக்கு இட்ட பெயர்

1. சிலோன் 2. சிலான் 3. தப்பிரபேன்

53. கீழே உள்ளவற்றில் நரம்புக்கருவி அல்லாதது?

1. தவில் 2. வீணை 3. தம்புரா

54. 

இலட்சினையில் Aயும் Bயும் குறித்து நிற்பவை முறையே?

1. தர்மச்சக்கரம், சந்திரன்
2. நிறைகுடம், தர்மச்சக்கரம்
3. தர்மச்சக்கரம், சூரியன்

55. செயற்கைப் பசளை எது?

1. மாட்டெரு 2. யூரியா 3. ஆட்டெரு


56. பின்வருவனவற்றில் நீரில் வாழும் தாவரம் அல்லாதது?

1. அல்லி 2. தணக்கு 3. பாசி

57. வவுனியாவில் இருந்து கொழும்பு செல்லும் கடுகதிபுகையிரதம் வவுனியாவை அடுத்து தரித்து நிற்கும் இடமாக அமைவது?

1. அனுராதபுரம் 2. கிளிநொச்சி 3. மதவாச்சி

இலங்கைப் புற உருவை அடிப்படையாகக் கொண்டு 58 , 59ம் வினாக்களுக்கு விடை தருக?



58. கதிர்காமம் நகரம் அமைந்துள்ள ஆங்கில எழுத்து யாது?

1. D 2. A 3. C

59. சிகிரியாவைக் குறித்து நிற்கும் எழுத்து யாது?

1. Q
2. R
3. S

60. "எனது பாடசாலையின் அழகு" என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

இவ் வினாத்தாள் பயிற்சியை சுயமாக மேற் கொள்ளுங்கள் இன்று மாலை 5.00 விடைத்தாளைப் பெற்று உங்கள் விடைகளைச் சரிபார்த்து குறிப்பெடுத்து மீண்டும் செய்து பாருங்கள்- இடர் காலத்தில் அவதானத்துடன் இருங்கள்.

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.lkedu.lk